தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.48 /மா/2024
நாள் 12.11.2024

திரு.R.கிருஷ்ணன், ... முறையீட்டு மனுதாரர்
சென்னை–44.

ஆணையர், ... எதிர் மனுதாரர்
தாம்பரம் மாநகராட்சி,
சென்னை–45.

சென்னை 44, குரோம்பேட்டை, நெமிலிச்சேரி, நன்மங்கலம் சாலை, மாருதி அவின்யூ, ரங்கநாதன் தெரு, கதவு எண்.7 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R.கிருஷ்ணன் என்பவரின் 04.03.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.03.2024 அன்று பெறப்பட்டு, 48/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை 44, குரோம்பேட்டை, நெமிலிச்சேரி, நன்மங்கலம் சாலை, மாருதி அவின்யூ, ரங்கநாதன் தெரு, கதவு எண்.7 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R.கிருஷ்ணன் என்பவர் தனது 04.03.2024 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட எல்லையில் அமைந்துள்ள எனக்கு சொந்தமான வீட்டுமனைக்கான காலி வரி மதிப்பீடு (VLT Assessment) செய்து தரக் கோரி 26.09.2023ம் தேதி மனு சமர்ப்பித்தேன். மேற்படி VLT காலி மனை வரி மனுவின் நிலையை சம்பந்தப்பட்ட அலுவலகம் சென்று விசாரித்த போது எவ்வித அறிவிப்பின்றி பில் கலெக்டர், திரு.மாணிக்கவாசகம் என்பவரால் எனது மனு நிராகரிப்பு செய்யப்பட்டதாக அறிந்தேன். அதனை அடுத்து 15.11.2023ம் தேதி இரண்டாம் முறையாக மனு சமர்ப்பித்தேன். மனுதாரரான எனது சொத்தின் உரிமையை நிலைநாட்டும் ஆவணமாக எனது பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் எனது சொத்தின் தாய் பத்திரம் தொலைந்து விட்டது என்பதால் சம்பந்தப்பட்ட தொலைந்த தாய் பத்திர ஆவணம் காணவில்லை என காவல்துறையில் புகார் அளித்து அதற்கான FIR மற்றும் Non-Traceable certificate பெறப்பட்டு அதன்பின் நியூஸ் பேப்பரில் விளம்பரம் செய்தபின் இத்தகைய போதிய ஆவணங்களை வைத்து சட்டப்படி பதிவு செய்யப்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தில்

வைத்து இணைத்து அதனையும் சேர்த்து பதிவு செய்து ஆவணத்தை மனுதாரரான நான் சம்பந்தப்பட்ட அலுவலரிடம் காலி மனை வரிக்கான மனுவில் இணைத்து சமர்ப்பித்தேன். ஆனால் சம்பந்தப்பட்ட வருவாய் ஆய்வாளர் மற்றும் உதவி ஆணையாளர் அவர்கள் மேற்படி சொத்தின் தாய் பத்திரம் தொலைந்து விட்டதால் எங்களுக்கு மேற்படி சொத்தின் உரிமைக்கான பட்டா மற்றும் பத்திரத்தின் உண்மைத்தன்மையை அறிய இயலவில்லை. மேற்படி சொத்துக்கான பட்டாவின் உண்மைத்தன்மையை அறிய சம்பந்தப்பட்ட பல்லாவரம் வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப் போவதாகவும் மற்றும் எனது சொத்துக்கான சட்ட கருத்தை (Legal Opinion) வழக்கறிஞரிடமிருந்து பெறவும், எனது பட்டா மற்றும் பத்திரத்துடன் கொண்ட ரயத்து மனை–ஐ (Private Land) உதவி ஆணையாளர் A.C மாரிச்செல்வி அவர்கள் நீர் நிலையில் அமைந்துள்ளதா / புறம்போக்கு நிலமா அல்லது மேற்படி நிலத்தில் சட்ட சிக்கல்கள் அல்லது வில்லங்கம் ஏதும் உள்ளதா என அவருக்கு சந்தேகமாகவும், குழப்பமாகவும் இருப்பதாக 30.01.2024 அன்று என்னிடம் நேரில் அவரது அலுவலகத்தில் அவரை சந்தித்த போது என்னிடம் உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

எனக்கு சொந்தமான சொத்துக்கு சட்ட கருத்து பெற அவர்களுக்கு என்ன உரிமை உள்ளது எனவும், அவர்கள் பொது மக்களிடமிருந்து பெறப்படும் வரிக்கான மனு தொடர்பாக மேற்படியான ஆவணங்களை கேட்டு பெறுகிறார்களா எனவும், பதிவு ஆவணம் மற்றும் லிங்க் ஆவணம் மற்றும் தொலைந்து போன தாய்பத்திரத்தின் நகல் ஆகியவை Copy of Document நகல் பெறப்பட்டு அதனை பொதுமக்கள் அரசிடமிருந்து பெற வேண்டிய சேவைகளுக்கு பயன்படுத்தி கொள்ளலாம் என உயர்நீதி மன்றம் மற்றும் உச்ச நீதிமன்றங்களின் தீர்ப்புகள் மற்றும் பதிவுத்துறையின் சுற்றறிக்கைகளும் எடுத்து கூறுகின்றன. இவ்வாறு இருக்கையில் பல்லாவரம் மண்டல உதவி ஆணையர் பத்திரப்பதிவு நகலை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என கூறுவது சட்டத்திற்கு விரோதமான செயலாகும். இவர் காலிமனை வரி அமைத்து தரக்கூடாது என்ற தவறான எண்ணத்தில் செயல்படுகிறார். மேலும் நகர அமைப்பு அலுவலகத்தில் (TPO) மனை உட்பிரிவு செய்யப்பட்ட ஆவணத்தை கட்டாயமாக பெறப்பட்டு அதனை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும் என கட்டாயப்படுத்துவது மிக தவறான செயலாகும். 24.01.2024ம் தேதி நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் துணை இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் அவர்களை நேரில் சந்தித்ததில் அவர்கள் காலி மனை வரி பெறுவதற்கு TPO நகரஅமைப்பு அலுவலரிடமிருந்து மனை உட்பிரிவு செய்யப்பட்ட ஆவணம் பெற வேண்டிய தேவை இல்லை என்று கூறினார்கள். பல்லாவரம் மண்டலத்தின் உதவி ஆணையாளர் அவர்களை இணை இயக்குநர் அழைத்து விசாரித்து மனை உட்பிரிவு செய்யப்பட்ட ஆவணம் பெற வேண்டிய கட்டாயம் இல்லை எனவும், அதற்கான சுற்றறிக்கைகள் இயக்குநர் அலுவலகத்தில் கொடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார். மேலும் மண்டல உதவி ஆணையாளர் எங்களை அதே வாரத்தில் சனிக்கிழமை 27.01.2024 அன்று அல்லது திங்கட்கிழமை 29.01.2024 அன்று நேரில் வாருங்கள் தங்களுடைய காலி மனை வரி ஆவணத்தை பதிவு செய்து தருகிறேன் என்று கூறி பல்லாவரம் அலுவலகத்தில் ஆள் பற்றாக்குறையினால் தற்சமயம் புதிதாக வேலை பார்த்து கொண்டுள்ள Cashier திரு.மாணிக்கவாசகம் கூடுதலாக இந்த பணியை செய்து வருகிறார், எனவே, அவருக்கு போதிய பயிற்சி இல்லாததால் அவர் தெரியாமல் கேட்டுள்ளார், நேரில் வாருங்கள் தங்களுக்குண்டான குறையை நான் தீர்த்து தருகிறேன் என பல்லாவரம் உதவி ஆணையர் என்னிடம் உறுதியுடன் கூறினார். 27.01.2024, 29.01.2024 மற்றும் பல முறை சென்ற போதும் என்னிடம் TPOவிடமிருந்து மனை உட்பிரிவு செய்யப்பட்ட ஆவணம் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும், Copy of Document நகல் வைத்து என்னால் காலி மனை வரி செய்து தர இயலாது எனவும், வருவாய் துறையின் பல்லாவரம் வட்டாட்சியரிடமிருந்து உட்பிரிவு செய்யப்பட்ட எனது பெயரில் பட்டா (Online Patta)பெற்று மனுவுடன் சமர்ப்பித்துள்ளேன். எனது புகாரை விசாரித்து எனக்கு காலி மனை வரி செலுத்த ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

புகார் மனு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அளிக்கப்பட்டதின் பெயரில் எந்தவித நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் அலுவலகத்தின் நிர்வாகத்தை கண்டித்து சட்ட ரீதியான ஆர்பாட்டம் செய்வதற்கு அரசு பொது ஊழியரான திரு.சிவக்குமார் (RI) என்பவரால் நான் தள்ளப்பட்டதின் காரணமாக 19.02.2024 தேதியிட்ட கடிதம் மூலமாக 20.02.2024 அன்று தாம்பரம் மாநகராட்சி ஆணையர் திருமதி.அழகுமீனா அவர்கள் என்னிடம் பெற்றுக்கொண்ட ஆர்ப்பாட்ட கடிதம் மற்றும் VLT வரிக்கான மனு ஆகியவை பெயரில் 19.02.2024 அன்று மாலை அலுவலக கூட்டத்திற்கு வந்திருந்த எதிர் மனுதாரரும், அரசு ஊழியரான திரு.சிவக்குமார் (RI) விசாரணை செய்த பின் தாம்பரம் மாநகராட்சி ஆணையர் இரண்டு நாட்களில் வரி செலுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என உறுதியுடன் கூறினார். இது நாள் வரை தாம்பரம் மாநகராட்சி ஆணையர் எந்த பதிலும், நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினாலும் மேலும் நான் மூத்த குடிமகன் என்பதை கருத்தில் கொண்டு எனது மனுவின் மீது துரித நடவடிக்கை எடுத்து எதிர்மனுதாராகிய திரு.சிவக்குமார் (RI) வருவாய் ஆய்வாளர் மீது சட்டரீதியான துறை நடவடிக்கை எடுக்குமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

2) மேற்கண்ட புகார் மனு மீது தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் 29.07.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது. தாம்பரம் மாநகராட்சி ஆணையர் தனது 03.09.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

திரு.R.கிருஷ்ணன் என்பவர் எண்.7, மல்லிகா நகர் விரிவு, பல்லாவரம், வார்டு–21ல் உள்ள காலியிடத்துக்கு காலிமனை வரி விதிக்ககோரிய விண்ணப்பம் மாநகராட்சிக்கு வரப்பெற்றது. காலிமனை வரிவிதிப்பு செய்ய சொத்துக்குண்டான கணினி மூலம் பெறப்பட்ட பட்டா நகல் (Online Patta) (மற்றும்) நீர் நிலையில் இடம் அமையவில்லை என்பதற்கான சான்று இணைத்து மீள சமர்ப்பிக்க கோரி விண்ணப்பம் திருப்பப்பட்டது. விண்ணப்ப மனு மீண்டும் இணையதள வழியாக சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தினை ஆய்வு செய்ததில் தாய்பத்திர நகல் சமர்ப்பிக்காமல் NON-TRACEABLE CERTIFICATE-DOCUMENT MISSING-CSR No.114/2020-ன் நகல் இணைத்துள்ளதை தொடர்ந்து, தாய்பத்திர நகல் (மற்றும்) மனை உட்பிரிவு அனுமதி பெறப்பட்ட வரைபட நகல் சமர்ப்பிக்க கோரி, கடிதம் அனுப்பப்பட்டது. காலிமனை வரிவிதிப்பு செய்தல் குறித்து மாநகராட்சி வழக்கறிஞர் அவர்களிடம் சட்டக்கருத்துரு கோரப்பட்டதில் 07.02.2024ல் தாம்பரம் மாநகராட்சி வழக்கறிஞரின் சட்டக்கருத்து பெறப்பட்டது. அதில் மனுதாரர் உரிய தாய் பத்திரம் சமர்ப்பிக்கப்படாமல் உள்ளதால், அன்னாரின் சொத்தினை உறுதிபடுத்த இயலவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மனுதாரர் அலுவலக உயர் அதிகாரிகள் (மற்றும்) பணியாளர்கள் மீது மன உளைச்சல் ஏற்படுத்தும் வகையிலும், பணியில் தொய்வு ஏற்படும் வகையில் அலுவலகத்தில் வந்து கீழ்தரமாக பேசியதும் இல்லாமல் அலுவலகத்தில் பணியாளர்களை பணி செய்யவிடாமல், சத்தம் போட்டது மட்டும் இல்லாமல் தாம்பரம் மாநகராட்சி மைய அலுவலகத்தில் வாசலில் கூட்டத்தினை கூட்டி தர்ணா போராட்டம் செய்து அலுவலர்களின் நன்மதிப்பினை கெடுக்கும் வகையில் தனியார் தொலைக்காட்சியில் பேட்டி கொடுத்தும் மாநகராட்சியின் மதிப்பினை கெடுக்கும் வகையிலும் நடந்து கொண்டார்.

(3) தாம்பரம் முனிசிப் கோர்ட்டில் உயர் அதிகாரிகள் (மற்றும்) பணியாளர்கள் பெயரில் L.S.P.No.24/2024, நாள்.18.03.2024–ல் குழு 11.00 மணிக்கு தாம்பரம் வட்ட சட்டப்பணிகள் குழு முன் விசாரிக்க ஆஜராக கோரி சம்மன் வரப்பெற்றது. அதனடிப்படையில் அன்றைய தினத்தில் வருவாய் ஆய்வர், வருவாய் உதவியாளர் (மற்றும்) அ1 எழுத்தர் விசாரணை குழு முன்ஆஜராகப்பட்டது. அந்த நேரத்தில் தாம்பரம் மாநகராட்சி வழக்கறிஞர் ஆஜராகி மேற்கண்ட கோப்பின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து விவரம் தெரிவித்த நிலையில் மனுதாரர் திரு.R.கிருஷ்ணன் என்பவர் எதுவும் பேசாமல் அவருடன் வந்த நபர் தொடர்பு இல்லாமல் கோப்பு தொடர்பாக பேசியது மட்டும் இல்லாமல் அரசு வழக்கறிஞரை தரக்குறைவாக பேசியதை

தொடர்ந்து, பெரும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. பிறகு சட்டபணிக்குழு, ஆவணங்களின் தாய்பத்திர நகலில் சார்பதிவாளர் ஒப்பம் பெற்றும் மேலும் பட்டாவில் வருவாய் பிரிவில் ஒப்பம் பெற்றும் மறுபடியும் தாம்பரம் மாநகராட்சியில் மனு சமர்ப்பிக்கப்பட்ட பிறகு காலிமனை வரி போட நடவடிக்கை எடுக்கப்படும் எனக்கூறி, திரு.R.கிருஷ்ணன் என்பவரின் மனுவினை நிராகரித்து சட்டப்பணிகள் குழு விசாரணை அதிகாரி வழக்கினை முடித்து வைத்தார்கள்.

(4) இதனை தொடர்ந்து தாம்பரம் மாநகராட்சியில் புதியதாக பணியில் சேர்ந்த துணை ஆணையர் திரு.க.பாலு அவர்களை மனுதாரர் நேரில் சந்தித்து, மேற்கண்ட கோப்பு நிலுவையில் உள்ளதால், இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க கோரி மேற்கண்ட இடம் தொடர்பான கூடுதல் ஆவணங்களை துணை ஆணையருக்கு நேரில் சமர்ப்பித்ததை தொடர்ந்து, கோப்பு உரிய விவரங்களுடன் நகர அமைப்பு பிரிவிற்கு அனுப்பப்பட்டு 02.05.2024–ல் 6038 சதுரடிக்கு காலிமனைவரி விதிக்கலாம் என நகர அமைப்பு பிரிவில் குறிப்பு பெறப்பட்டு , வருவாய் பிரிவின் மூலம் 27.05.2024 தேதி காலிமனை வரி நிர்ணயம் செய்து, சிறப்பு அறிக்கை 27.05.2024–ம் தேதி சம்மந்தபட்ட மனுதாரர் திரு.R.கிருஷ்ணன் என்பவருக்கு நேரில் வழங்கப்பட்டுள்ளது. இப்பணி தொடர் நடவடிக்கையிலிருந்து காலிமனை வரி விதிப்பு செய்து மனுதாரரால் காலிமனை வரி விதிப்புக்கான தொகை ரூபாய் 52,116/–ஐ 06.06.2024 அன்று செலுத்தப்பட்டு கோப்பு முடிவு செய்யப்பட்டுள்ளது.

(5) மேலும் பத்து ரூபாய் இயக்கம் சார்ந்த நபர்களால், தாம்பரம் மாநகராட்சி, மண்டலம்–2ல் அனைத்து அலுவலக பணிகள் குறித்தும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 91 மனுக்கள் இணையதள வாயிலாக பொது தகவல் அலுவலர் (மற்றும்) அரசு சார்பு செயலர், தலைமைச் செயலகம் மூலம் தாம்பரம் மாநகராட்சி, மண்டலம்–2க்கு அனுப்பப்பட்டுள்ளது. பத்து ரூபாய் இயக்கம் சார்ந்த நபர்களின் உள்நோக்கம் கொண்ட இதுபோன்ற தொடர் நடவடிக்கையினால் அலுவலகப் பணிகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.''என தெரிவித்துள்ளார்.

6) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 24.10.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 08.10.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

மனுதாரர் திரு.R.கிருஷ்ணன் 24.10.2024 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் முன்பு நேரடியாக ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்தார்.

“எனக்கு சொந்தமான 14 செண்ட் காலிவீட்டு மனைக்கான வரி மதிப்பீடு செய்து தரக்கோரி தாம்பரம் மாநகராட்சிக்கு 27.10.2022, 26.09.2023 மற்றும் 15.11.2023 ஆகிய தேதிகளில் சமர்ப்பித்த பல்வேறு மனுக்கள் மீது எந்தவித நடவடிக்கை ஏதும் எடுக்காமல் அற்பமான காரணங்களை கூறி என்னை 2 வருடங்கள் அலைகழித்தது இல்லாமல் RI சிவக்குமார் என்னை தனியாக அழைத்து என்னிடமும் என்னுடன் இருந்த நபரிடம் ரூ.2 இலட்சம் லஞ்சமாக கேட்கிறார், அதற்கு நான் அவர் கேட்ட லஞ்ச பணத்தை கொடுக்க மாட்டேன் என கூறியபோது நான் MLA மற்றும் சேர்மன் (மண்டலம்–2) ஆகியோரின் ஆள், நீ எங்கேயாவது போ, நான் அதனை பார்த்து கொள்கிறேன். உன்னால் VLT வரி வாங்க முடியாது என கூறினார் (RI சிவக்குமார்).

நான் மனு கொடுத்த நாளிலிருந்து இதுவரை 100 முறைக்கு மேல் RI சிவக்குமார் மற்றும் AC மாரிச்செல்வி ஆகியோரை நேரில் சந்தித்து கேட்டும் எந்த பலனும் இல்லாமல், அவர் கேட்ட லஞ்ச பணத்தை கொடுக்காததால், காழ்ப்புணர்ச்சி காரணங்களால் எனது மனுவை நிராகரிப்பதற்கு காரணம் வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் நான் மனு கொடுத்து 1–1/2 வருடங்கள் கழித்து RI சிவக்குமார் மற்றும் AC மாரிச்செல்வி ஆகியோர் அவர்களது அலுவலக

வழக்கறிஞரிடம் சட்ட கருத்துரை வாங்கியுள்ளதாகவும், அந்த சட்ட கருத்துரையில், என்னுடைய சொத்தின் Title Document–ல் குறைகள் இருப்பதால் VLT வரி போட வேண்டாம் என்று சட்ட கருத்துரு பெற்று இருப்பதாகவும், அதன் அடிப்படையில் உங்கள் மனு ஏற்றுக் கொள்ள முடியாது என்று RI சிவக்குமார் மற்றும் AC மாரிச்செல்வி ஆகிய இருவரும் கூறினார்கள். அதற்கு நான் என்னுடைய சொத்தில் எந்த வில்லங்கமும் இல்லாதபட்சத்தில், என்ன வில்லங்கம் இருப்பதாக சட்ட கருத்துருவில் குறிப்பிடப்பட்டுள்ளது, அதன் விவரத்தை எனக்கு காண்பிக்கும்படி கேட்டேன். அதற்கு Legal opinion எல்லாம் காண்பிக்க முடியாது, நான் உங்களுக்கு வாய்மொழியாக (Oral) சொல்கிறேன் என, AC மாரிச்செல்வி அவர் சட்ட கருத்துருவில் சொல்லி உள்ள குறைகளை கூறியதாவது என்னவென்றால், நான் பெற்ற செட்டில்மெண்ட் ஆவணம் அதற்கு முந்தைய தாய்பத்திரமான கிரைய பத்திரம் தொலைந்துவிட்டது என பல்லாவரம் காவல் நிலையத்தில் என் அண்ணன் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் Non-Traceable certificate வாங்கி அதன் மூலம் பல்லாவரம் சார்பதிவாளரால் தொலைந்து போன ஆவணத்தின் மற்றொரு அசல் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் நீங்கள் தொலைத்துவிட்டது என (place of missing) கூறி தொலைந்து விட்ட இடம் பல்லாவரம் காவல் நிலைய நிலவரம்பு அதிகாரத்திற்கு வராது. எனவே, நீங்கள் வாங்கிய Non-Traceable certificate செல்லாது என்று சட்ட கருத்துரு கொடுக்கப்பட்டுள்ளது என AC மாரிச்செல்வி என்னிடம் கூறினார். நான் உடனே சரியான காவல் நிலையத்தில் ஆவணம் தொலைந்து விட்டதாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் நிலவரம்பு அதிகாரம் குறித்து புகாரை வாங்கிய காவல் ஆய்வாளரும் கேள்வி எழுப்பவில்லை. அதன் அடிப்படையில் காவல் ஆய்வாளர் வழங்கிய Non-Traceable certificateஐ பெற்று பிரதி அசல் ஆவணத்தை வழங்கிய சார்பதிவாளரும் கேள்வி எழுப்பவில்லை. மேலும் VLTக்காக கொடுத்த புகாரின் பெயரில் நிலவரம்பு அதிகாரம் குறித்து எழுப்புகிற சந்தேகத்தின் பெயரில் என்னுடைய சொத்தின் உரிமையில் எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படுத்தாது. நீங்கள் எழுப்பியுள்ள சந்தேகம், ஆவணம் தொலைந்ததா, இல்லையா என்கிற விடையத்திற்கு தான் உட்பட்டு வருமே தவிர என்னுடைய சொத்தின் உரிமை சார்ந்து சந்தேகம் எழவில்லை. மேலும், ஆவணத்தின் பதிவு குறித்த விவரத்தை EC போட்டு பார்த்தாலே தாய்பத்திரத்தின் பதிவை உறுதிப்படுத்த முடியும். மேலும் நான் தங்களிடம் என்னுடைய பெயரில் உள்ள செட்டில்மெண்ட் மற்றும் பட்டா ஆவணங்களின் அடிப்படையில்தான் VLT வரிக்கான மனு கொடுத்துள்ளேன். எந்த வில்லங்கமும் இல்லாமல் இருக்கும்பட்சத்தில், இந்த சட்ட கருத்துருவில் மேற்கூறிய காரணங்களை கூறி எனது VLT மனுவை நிராகரித்தீர்கள் என்று வாதிட்டேன். உடனே RI சிவக்குமார் என்னை பார்த்து யோவ் பெருசு – உன் சொத்து சுத்தமான சொத்துனு எனக்கு தெரியாதா, நான் கேட்ட லஞ்சத்தை நீ எனக்கு கொடுக்கவில்லை என்றால், இப்படித்தான் அற்பமான காரணங்களை சொல்லி எங்கள் வக்கீல் மூலமாக பொய்யான சட்ட கருத்துருவை உருவாக்கி உன் VLT வரி மனுவை நிராகரிப்பு செய்வேன். இப்பவும், ஒன்றும் கெட்டுப் போகல நான் கேட்ட 2 இலட்சம் ரூபாயில் 1.5 இலட்சம் பணமாவது கொடுத்து சத்தம் இல்லாமல் உன் வேலையை முடித்து VLT வரி வாங்கிக்கோ. நானும் நான் வாங்கி இருக்கிற சட்டக் கருத்தை கிழித்து போடுவேன். நீயும் உன் வேலையை முடிச்சிக்கோ என்று ஒருமையில் பேசி மிரட்டினார். அவர் என்னிடம் கேட்ட லஞ்ச பணத்தை கொடுக்காததால் அற்பமான காரணங்களை உருவாக்கி பொய்யான சட்ட கருத்துருவை பெற்று வன்மமான செயலில் ஈடுபட்டு வந்தார். மேலும் எனது மூத்த மகனின் திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த நிலையில் திருமணத்திற்கான செலவுத் தொகைக்காக கடன் பெற செல்லும் போது எனது இடத்தின் சொத்துக்கான பத்திரம் மற்றும் பட்டா ஆவணங்களுடன் மின்கட்டண ரசீதும், வரி செலுத்தும் ரசீதும் கொடுக்க வேண்டுமென பைனான்சியர் கூறிய நிலையில் நான் VLT வரிக்காக மனு அளித்திருந்தேன். VLT சரியான நாட்களில் கிடைக்காததால் எனது மகனுக்கு ஏற்பாடு செய்திருந்த திருமண நிகழ்ச்சி தடைபட்டு எனது குடும்பத்திற்கு பெரிய கேடும், அவமானமும் ஏற்பட்டு பெரிய மன உளைச்சலுக்கு

ஆளாகிவிட்டேன். எனவே லஞ்சம் கொடுக்காததால் காழ்ப்புணர்ச்சி காரணத்தால் எனக்கு உரிய காலத்தில் VLT வரி செலுத்த ஆவன செய்யாத RI சிவக்குமார், AC மாரிச்செல்வி, பில்கலெக்டர் திரு.மாணிக்கவாசகம் ஆகிய மூவர் மீதும் தகுந்த சட்ட நடவடிக்கைகள் மற்றும் துறை ரீதியான நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த வாக்குமூலத்துடன் எனது விளக்கமான வாதுரையை தனியாக தட்டச்சு செய்து கொண்டு வந்துள்ளேன் அதனையும் இத்துடன் இணைத்துள்ளேன். அந்த விளக்கத்தையும் என் வாக்குமூலத்தின் அங்கமாக பார்க்க வேண்டுகிறேன் என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தனது வாதுரையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வரும் குடிமகன் ஆவேன். எனக்கு சொந்தமான பல்லாவரத்தில் உள்ள தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட சொத்துக்கு VLT காலி மனை வரி செலுத்துவதற்காக விண்ணப்பம் 26.09.2023 அன்று வரி விண்ணப்பத்திற்கான கட்டணம் ரூபாய் 10 பணமாக செலுத்தி CFC No.8744 என பதிவான எனது VLT மனுவை எந்தவித காரணமும் தெரிவிக்காமல் 10.10.2023 அன்று சம்பந்தப்பட்ட வருவாய் ஆய்வாளரின் சொல் பிரகாரம் பில் கலெக்டர் மாணிக்கவாசகம் நிராகரித்து விட்டதாக என்னிடம் கூறினார். நான் எனது வழக்கறிஞர் மற்றும் சமூக ஆர்வலரின் உதவியோடு உடனடியாக RI சிவக்குமாரிடம் கேட்டபோது அவர் மீண்டும் என்னை புதிதாக VLT மனு வழங்கும்படி கூறினார். 15.11.2023 அன்று புது VLT மனு சமர்ப்பித்து CFC No.9142 ஆக பதிவு செய்தேன். என் மனுவின் மீது எந்தவித நடவடிக்கைகள் எதுவும் இல்லாதை அறிந்து RI சிவக்குமாரிடம் விவரங்கள் கேட்க அலுவலகம் சென்றால் அவர் இல்லை என்றும், அவரை பார்க்க முடியாது என்றும் அவர் அலுவலகத்தில் இருக்க மாட்டார் எனவும் அவரை பார்க்க கீழே உள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு சென்றால் பார்க்க முடியும் என்றும் மேலும் அவர் கூடுதலாக B1 பொறுப்பு பதவி வகித்து வருகிறார் என்று கூறினர். VLT மனு சம்மந்தமாக விவரங்கள் சேகரிக்க அலுவலகம் போகும்போது 10க்கும் மேற்பட்ட வரி சம்பந்தமான விண்ணப்பதாரர்கள் நின்று கொண்டிருப்பார்கள். அதில் வயதில் முதிர்ந்தவர்களாகவே இருப்பார்கள். 2022–ம் ஆண்டில் இருந்து என்னை இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகவே VLT வரி செலுத்த ஆவன செய்யாமல் அலைய விட்டனர். உள்ளூரில் உள்ள அரசியல் பிரமுகர் எனது VLT மனு குறித்த விவரங்கள் கேட்ட போது RI சிவக்குமார் என்னுடன் இருந்த ஒரு நபரிடம் வரி செலுத்த வேண்டும் என்றால் ரூபாய் 2 லட்சம் பணம் கொடுத்தால் மட்டுமே வேலையை முடித்து தருவேன் என்றும் அந்த சொத்தானது பல்லாவரம் பைபாஸ் ரோடு அருகில் உள்ளதால் அது அதிக மதிப்பு உள்ள சொத்தாகும். அந்த பணத்தை பெற்று கொண்டு எனக்கு மேல் உள்ள உதவி ஆணையர் மற்றும் மண்டல குழு தலைவருக்கும் பிரித்து தரவேண்டியது எனது பொறுப்பாகும் அப்படி பணம் தரவில்லை என்றால் இன்னும் எத்தனை வருடங்கள் ஆனாலும் அப்படியே கிடப்பில் இருக்கும் என்று கூறினார். எனது மகன் திருமணத்திற்காக செலவிற்கான கடன் பெறுவதற்கு தான் வரி செலுத்த வந்திருக்கிறேன். ஆனால் நான் திருமணத்திற்கு உணவுக்காக மட்டுமே செலவு செய்யக்கூடிய பணத்தை கேட்பது எந்தவித நியாயமும் கிடையாது என உறுதியாக கூறினேன். மேலும் இச்சம்பங்கள் குறித்து 40க்கும் மேற்பட்ட புகார் மற்றும் குறைதீர் மனுக்களை மாண்புமிகு முதல்வர், தலைமைச்செயலர், அரசுத்துறைசெயலர், இயக்குனர் DMA, மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் ஆணையர், இயக்குநர் VNTC சட்டப்பணிகள் குழு மற்றும் மாவட்ட முதன்மை வரி விதிக்கும் முழு விவரங்களுடன் தனித்தனியே மனு செய்துள்ளேன். TNLBO மேற்படிபுகார் மனு மீது நடவடிக்கை எடுக்க கோரி தாம்பரம் மாநகராட்சி அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும், தாம்பரம் மாநகராட்சி ஆணையர், பில்கலெக்டர் மாணிக்கவாசகம், RI சிவக்குமார், உதவி ஆணையர் மாரிச்செல்வி இரண்டு முறை எனது ஆவணங்களை பரிசீலனை செய்து வரி விதிப்பு செய்து தரலாம் எனவும், இரண்டு நாட்களில் முடித்து விடலாம் என கூறி மாநகராட்சி உயர்மட்ட அலுவலரான மாநகராட்சி துணை ஆணையர் உத்தரவினை மதித்து செயல்படாதவர்கள் சாதாரண மக்களை எப்படி மதிப்பார்கள் என்று கேள்வியாக

உள்ளது என்பதால் இம்முறைமன்ற நடுவம் முன்பு இப்புகாரை தாக்கல் செய்துள்ளேன். 18.03.2024ல் தாம்பரம் வட்ட சட்ட பணிகள் குழு நடத்தப்பட்ட விசாரணையின் போது வேண்டுமேன்றே வழக்கை திசை திருப்பி விட்டு சரியாக நடத்தாமல் எதிர் மனுதாரர் வரிசையில் உள்ள மூவரும் அரசு வழக்கறிஞர் திரு.நெப்போலியன் அவரிடமிருந்த சக வழக்கறிஞர்கள் உதவியோடு நீதியை நிலை நாட்டக்கூடிய நீதிமன்றத்தில் என்னையும் எனது குடும்பத்தினரையும், எனது உதவியாளரையும் அவமானப்படுத்தி அனுப்பி வைத்தனர். இவை அனைத்திற்கும் சாட்சிகள் என்னிடம் உள்ளது. நீதிமன்றத்தின் சட்டப்பணிகள் குழு விசாராணையில் நடந்ததைப்பற்றி புகாரினை மாவட்ட முதன்மை நீதிபதியிடம் வழங்கியுள்ளேன். மேலும் VLT மனு தொடர்பான புகார் மற்றும் தாம்பரம் மாநகராட்சியில் நடைபெற்ற முறைகேடுகளை மக்களுக்கு இடையூறாக செய்யும் சேவை குறைபாடு குறித்து 40க்கும் மேற்பட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பொதுமக்கள் மற்றும் பல்வேறு சமூக அமைப்புகள் எல்லோரும் ஒன்று கூடி தாம்பரம் மாநகராட்சிக்கு எதிரான மிகப்பெரிய அளவில் ஆர்ப்பாட்டம் நடத்தினோம். மேலும் 10 நாட்கள் இருக்கும் போது 2024 நாடாளுமன்ற தேர்தல் விதிமுறைகள் இருந்ததால் தேர்தலுக்கு 10 நாட்கள் முன்பு வரை பல இடங்களில் புதுசாலைகள், குப்பை அகற்றும் பணிகள், தெருவிளக்கு புதிதாக அமைக்கும் பணி மற்றும் சரிபார்ப்பு பணி, பல்லாவரம் மண்டலம் 2 அலுவலகத்தில் நடவடிக்கை எடுக்காமல் தேக்கத்தில் இருந்த 200க்கும் மேற்பட்ட வரி விண்ணப்ப கோப்புகள் அனைத்தும் RI சிவக்குமாருக்கு கூடுதலாக பணிகள் இருப்பதால் கண்காணிப்பாளரான திரு ராஜீவ் (முன்னாள் RI) கூடுதலாக பொறுப்பு வழங்கப்பட்டு அனைத்து ஆவணங்களும் நடவடிக்கை எடுத்து எனது VLT மனு மற்றும் நில மதிப்பு அதிகம் உள்ள கோப்புகள் தவிர தீர்வு காணப்பட்டது. இவை அனைத்தையும் பல்லாவரம் மண்டலம் 2 அலுவலகத்தில் RTI 2J மூலம் கள ஆய்வு செய்த கோப்புகளை பார்வையிட்டபோது தெரிந்து கொண்டேன். எனது VLT மனு மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என விவரம் கேட்டபோது தாம்பரம் மாநகராட்சியின் Standing Council மற்றும் அரசு வழக்கறிஞர் திரு.நெப்போலியனிடம் பெற்ற சட்ட கருத்தில் எனது VLT மனு மீது வரிவிதிப்புக்கான ஆவணம் செய்யக்கூடாது என ஆதாரம் பெற்றுள்ளதாக கூறினார். மேலும் எனது சொத்து ஆவணத்தில் குறைபாடுகளும், பிரச்சனைகளும் இருப்பதாகவும், இந்த சொத்து உங்களுக்கு சொந்தமானது தானா என்ற சந்தேகம் இருப்பதாக கூறி என்னை மனஅழுத்தத்திற்கு ஆளாக்கி விட்டனர். RI சிவக்குமார் என்னை மற்றும் எனது மகன், எனது உதவியாளர் ஆகியோரிடம் புகார்கள் அனைத்தையும் வாபஸ் பெற வேண்டும் என உள்ளூரில் உள்ள சில நபர்கள் மூலம் என்னை மிரட்டி வருகிறார். ஏழு மாதங்களுக்கு முன்பாக RI சிவக்குமார் என்னிடம் நான் யார் தெரியுமா? முன்னாள் சேர்மனின் PC தற்போது நான் அரசியல் செல்வாக்கில் தான் இந்த அலுவலகத்திற்கு வந்துள்ளேன் மற்றும் பல்லாவரம் MLA சேர்மன் மண்டலம் 2 அவர்களின் அரசியல் செல்வாக்கில் நான் பலமாக உள்ளேன் எனவும் ஏதாவது அவர்களிடம் உன்னைப்பற்றி கூறிவிடுவேன் என மிரட்டியதால் அதனால் ஏற்பட்ட பயம் மற்றும் அச்சுறுத்தல் காரணத்தால் காவல் துறையில் புகார் அளித்தேன். எனது புகார் குரோம்பேட்டை மற்றும் பல்லாவரம் காவல் நிலையத்தில் அரசியல் பிரமுகர்களின் ஆதரவால் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் நிலுவையில் உள்ளது. 27.05.2024 மாலை 5 மணி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களை நேரில் சந்தித்து நடந்த சம்பவங்களை அனைத்தையும் கூறி அதனை பரிசிலீனை செய்து மாலை 6 மணிக்கு மேல் எனது VLT மனு வரி விண்ணப்பம் மீது ஒரு மணி நேரத்தில் துரித நடவடிக்கை எடுத்து இரவு 7.30 மணிக்கு மேல் வரி விதிப்பு ஆவணம் கண்காணிப்பாளர் திரு.ராஜீவ் என்பவர் அலைபேசியில் என்னை தொடர்பு கொண்டு நேரில் ஆணையை வழங்கினார்.

இரண்டு வருடங்களாக என்னை அலையவிட்டு உடல் ரீதியான பாதிப்பு மற்றும் மருத்துவ செலவு, தினமும் அலுவலகத்திற்கு சென்று வந்த போக்குவரத்து செலவு, பிற அரசு அலுவலங்களுக்கு புகார் அளிக்க சென்றது, எனது மகன் திருமண ஏற்பாடு நின்று போனதால் ஏற்பட்ட குடும்ப அவமானங்கள் ஆகிய அனைத்தையும் அனுபவித்தும் கிடைக்காத அந்த VLT

வரி எப்படி மாலை ஒரு மணி நேரத்தில் கிடைத்தது என்பதற்கான தெளிவான, முழுமையான விவரங்கள் அனைத்தையும் எதிர் மனுதாரரான மூவரும் எழுத்துப்பூர்வமாக இம்முறை மன்ற நடுவர் விசாரணையில் கொடுக்க வேண்டும் மற்றும் அதன் நகல் எனக்கு வழங்க வேண்டும். என்னுடைய நிலம் எங்கு இருக்கிறது என்று தெரியாமலும், பார்வையிடாமலும் இரண்டு முறை எதிர் மனுதாரர்கள் மூவரும் நிராகரிப்பு செய்தனர். RTI-ல் விவரம் கேட்டும் முழு கோப்புகளின் நகல்களை வழங்கவில்லை. கடிதம் அனுப்புகையில் முன்னுக்கு பின்னாக தவறான தேதியில் அனுப்பி மனுதாரரான என்னை ஏமாற்றமடைய செய்தனர். பொது மக்களுக்கான சேவைகள் அரசு ஊழியர்கள் செய்ய வேண்டும். ஆனால் அவர்கள் செய்யாமலும், மக்கள் வரிப்பணத்தில் மாதம் தவறாமல் ஊதியம் வழங்கப்படுகிறது. அரசாணை எண்.73/2018ல் கண்ட நெறிகளின்படி அவர்கள் செய்த குற்றம் ஒரு செயலாக கருதி சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை WP 20527/2014 & MP 1/2024 dt. 02.08.2014 என்ற வழக்கில் பொதுவாக அனைத்து அரசு அலுவலகத்திற்கும் வழங்கப்பட்ட தீர்ப்பையும் மதிக்கவில்லை. விசாரணையின் உத்தரவை வைத்து நான் நீதிமன்றத்திற்கு நியாயம் தேடி செல்ல இருப்பதாலும், நியாயம் என் பக்கம் இருப்பதாலும், இந்திய அரசியலமைப்பு அரசியல் சாசனப்படி உச்ச நீதிமன்றம் செல்ல இருப்பதாலும், இதனைப் பற்றிய செய்திகள் அனைத்து மீடியாவிலும் வெளியிடப்பட்டு கடந்த மார்ச் மாதம் கிட்டத்தட்ட பத்துக்கும் மேற்பட்ட மீடியாக்களில் செய்தி வெளியாகியுள்ளது, மேலும் அனைத்து விசாரணைகள், கடித போக்குவரத்துக்கள் மற்றும் எனது புகார்கள் அனைத்தையும் கோப்பாக பத்திரப்படுத்தி வைத்துள்ளேன்.

எனது VLT மனு வரி விண்ணப்பம் நடவடிக்கை எடுக்காமல் என்னை மிரட்டி அச்சுறுத்தி லஞ்சம் கேட்டு என்னை அலைய விட்டது அல்லாமல் சட்டத்தையும், அரசாணைகளையும், நீதிமன்றத்தையும் வரி செலுத்தும் மக்களின் ஒருவரான 73 வயதான மூத்த இந்திய குடிமகனான என்னை இரண்டு வருடங்கள் அலைக்கழித்த எதிர் மனுதாரர்கள் மூவர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இதனை பற்றி ஆய்வு மேற்கொள்ள இயக்குநர் DVC கிண்டி அவர்களுக்கு சம்மந்தப்பட்ட அரசு துறைக்கும் VLT மனு மீதான நடிவக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் என எனது புகார் மீதான எழுத்துப்பூர்வமான வாதுரை வாயிலாக பரிகாரம் கோருகிறேன்'' என தெரிவித்துள்ளார்.

7) தாம்பரம் மாநகராட்சியின் கண்காணிப்பாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலர் ஆகியோர் 24.10.2024 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி பின்வருமாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள்.

"திரு.R.கிருஷ்ணன், என்பவர் பல்லாவரம், வார்டு–21, மல்லிகா நகர் விரிவு, கதவு எண்.7ல் உள்ள காலியிடத்துக்கு காலிமனை வரி விதிக்க கோரி விண்ணப்பம் அளித்தார். காலிமனை வரிவிதிப்பு செய்ய சொத்திற்கு உண்டான தாய்பத்திர நகல், கணினி மூலம் பெறப்பட்ட பட்டா நகல் (Online Patta) (மற்றும்) நீர் நிலையில் இடம் அமையவில்லை என்பதற்கான சான்று இணைத்து மீள சமர்ப்பிக்க கோரி விண்ணப்பம் திருப்பி அனுப்பப்பட்டது.

மீள சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தினை ஆய்வு செய்ததில் தாய்பத்திர நகல் சமர்ப்பிக்காமல் NON-TRACEABLE CERTIFICATE-DOCUMENT MISSING-CSR No.114/2020-ன் நகல் இணைத்துள்ளதை தொடர்ந்து, தாய்பத்திர நகல் மற்றும் மனை உட்பிரிவு அனுமதி பெறப்பட்ட வரைபட நகல் சமர்ப்பிக்க கோரி, மனுதாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

மனுதாரரின் காலிமனை வரிவிதிப்பு செய்தல் குறித்து மாநகராட்சி வழக்கறிஞர் அவர்களிடம் சட்டக்கருத்துரு கோரப்பட்டது. 07.02.2024–ல் தாம்பரம் மாநகராட்சி வழக்கறிஞர் மனுதாரர் உரிய தாய் பத்திரம் சமர்ப்பிக்காமல் உள்ளதால், அன்னாரின் சொத்தினை உறுதிபடுத்த இயலவில்லை என தெரிவித்தார்.

தாம்பரம் முன்சீப் கோர்ட்டில் உயர் அதிகாரிகள் (மற்றும்) பணியாளர்கள் பெயரில் L.S.P.No.24/2024, நாள்.18.03.2024–ல் 11.00 மணிக்கு தாம்பரம் வட்டசட்டப்பணிகள் குழு முன் விசாரிக்க ஆஜராக கோரி சம்மன் வரப்பெற்றதை தொடர்ந்து அதனடிப்படையில், அன்றைய தினத்தில் வருவாய் ஆய்வாளர், வருவாய் உதவியாளர் (மற்றும்) அ1 எழுத்தர் விசாரணை குழுமுன் ஆஜரானார்கள்.

ஆவணங்கள், சார்பதிவாளர் ஒப்பம் பெற்ற தாய்பத்திரத்தின் நகல், வருவாய் பிரிவில் ஒப்பம் பெற்ற பட்டா ஆகியவற்றுடன் மனுதாரரால் மீண்டும் தாம்பரம் மாநகராட்சியில் மனு சமர்ப்பிக்கப்பட்ட பிறகு காலிமனை வரி போட நடவடிக்கை எடுக்கப்படும் எனக்கூறி, திரு.R.கிருஷ்ணன், என்பவரின் மனுவினை நிராகரித்து சட்டப்பணிகள் குழு விசாரணை அதிகாரி வழக்கினை முடித்து வைத்தார்கள்.

மனுதாரர் மேற்கண்ட இடம் தொடர்பான கூடுதல் ஆவணங்களை துணை ஆணையருக்கு நேரில் சமர்ப்பித்ததை தொடர்ந்து, கோப்பு உரிய விவரங்களுடன் நகர அமைப்பு பிரிவில் அனுப்பப்பட்டு 02.05.2024–ல் 6038 சதுரடிக்கு காலிமனைவரி விதிக்கலாம் என நகர அமைப்பு பிரிவில் குறிப்பு பெறப்பட்டு , வருவாய் பிரிவின் மூலம் 27.05.2024 தேதி காலிமனை வரி நிர்ணயம் செய்து, சிறப்பு அறிக்கை 27.05.2024–ம் தேதி சம்மந்தபட்ட மனுதாரர் திரு.R.கிருஷ்ணன் என்பவருக்கு நேரில் வழங்கப்பட்டு காலிமனை வரி விதிப்பு செய்து மனுதாரரால் காலிமனை வரிவிதிப்புக்கான தொகை ரூபாய் 52,116/–ஐ 06.06.2024 அன்று செலுத்தப்பட்டு கோப்பு முடிவு செய்யப்பட்டுள்ளது என இம்முறைமன்ற நடுவத்தில் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்கள்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், வாதுரை, தாம்பரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை, மாநகராட்சி அலுவலர்களின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் தனக்கு சொந்தமான வீட்டு மனைக்கான காலிமனை வரி மதிப்பீடு செய்து தரக்கோரி தாம்பரம் மாநகராட்சிக்கு மனு சமர்ப்பித்துள்ளார். அவரது VLT வரி விண்ணப்பம் மீது நடவடிக்கை எடுக்காமல் லஞ்சம் கேட்டு கணக்கில்லாமல் அலைய விட்டு ஏறத்தாழ இரண்டு வருடங்கள் கடந்து 27.05.2024ம் தேதி காலிமனை வரி நிர்ணயம் செய்யப்பட்டு மனுதாரரும் ரூ 52,116/–ஐ 06.06.2024 அன்று செலுத்தியுள்ளதை மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் மற்றும் மாநகராட்சி அலுவலர்களின் வாக்குமூலம் மற்றும் தாம்பரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

தாம்பரம் மாநகராட்சி அலுவலர்கள் முறையீட்டு மனுதாரர் திரு.R.கிருஷ்ணனின் காலிமனை வரி விதிப்பு தொடர்பான கோப்பினை பரிசீலித்த பொழுது மனுதாரர் வரிவிதிப்பு கோரி காலிமனையின் தாய்பத்திரம் தொலைந்துவிட்டதன் காரணமாக அவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் தவிர மேலும் சில ஆவணங்கள் தேவைப்பட்டதால் அதனை சமர்ப்பிக்க கோரியதின் காரணமாக காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இது போன்ற நேர்வுகளில் ஆவணங்கள் கோருவது இயல்பான நடைமுறையாக இருப்பினும், சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் குறித்து மனுதாரருக்கு சரியாக வழிகாட்டியிருந்தால் இந்த காலதாமதத்தை தவிர்த்திருக்கலாம். இரண்டு வருட காலதாமதத்திற்கு பின்னர் மனுதாரரின் காலிமனை சொத்துவரி விதிப்பதற்கான கோரிக்கை தாம்பரம் மாநகராட்சியால் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. எனினும், மனுதாரர் மாநகராட்சி அலுவலர்கள் தன்னை மிரட்டி அச்சுறுத்தி இலஞ்சம் கேட்டு அலைகழித்தாக குற்றச்சாட்டு எழுப்பியுள்ளார். இக்குற்றச்சாட்டு தொடர்பான ஆதாரம் ஏதும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கவில்லை என்ற போதிலும் மேற்கண்ட குற்றச்சாட்டு கடுமையானது என்பதனை இம்முறைமன்றம் கருத்தில் கொள்கிறது. எனவே மனுதாரர் மேலே குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டின் உண்மை தன்மையை அறியும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் ஒரு விரிவான விசாரணையை மேற்கொண்டு அதனடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் பொதுமக்கள்

தங்கள் குறைகளை தீர்க்க வேண்டி கோரிக்கை மனுக்களை மாநகராட்சிக்கு சமர்ப்பிக்கும் பொழுது அதனை காலம் தாழ்த்தாமல் அரசு வழங்கியுள்ள வழிகாட்டுதல்களின்படி விரைந்து தீர்வுகள் கிடைக்க நடவடிக்கை எடுக்கவும், தாம்பரம் மாநகராட்சி ஆணையரை இம்முறை மன்ற நடுவம் அறிவுறுத்துகின்றது.

2024 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.R.கிருஷ்ணன்,
எண்.7, ரங்கநாதன் தெரு, மாருதி அவென்யூ,
நன்மங்கலம் சாலை, நெமிலிச்சேரி,
குரோம்பேட்டை,
சென்னை–600 044.

2) ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி,
சென்னை–600 045.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

4) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவர் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032

5/9